நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

பாரதிதாசன்
கல்வி நிறுவனம்
( BECON )
A/L 92
வர்த்தகமும் நிதியும்
வினா - விடை வகுப்பு
ஆரம்பம் : 18 — 4 — 92
சனி 12-00 மணி

பாரதிதாசன்
கல்வி நிறுவனம்
( BECON )
A/L 94
வகுப்புகள்
ஆரம்பம் : 18 — 4 — 92
சனி காலை 8-00 மணி

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 03 புதன்கிழமை (15-04-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 139

# யாழ் கடல் ஏரி வற்றியவுடன் குடாநாட்டின் மீது தாக்குதல்!

## இராணுவ அதிகாரிகள் தகவல்

கொழும்பு, ஏப்ரல் 15

யாழ். குடாநாட்டை ஏனைய பகுதிகளிலிருந்து பிரிக்கும் குடாக் கடல் நீரேரி மே மாதத்தில் வற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது. அது வற்றியதும் — எதிர்வரும் 3 மாத காலத்தினுள் — குடாநாட்டின் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்துவர்.

ஸ்ரீலங்கா இராணுவ அதிகாரிகளை மேற்கோள் காட்டி "ஏசியா வீக்" சஞ்சிகை இத்தகவலை வெளியிட்டுள்ளது.

''ஏஸியா வீக்'' சஞ்சிகை தனது ஏப்ரல் முதல் வார இதழில் இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

அச்சஞ்சிகை வெளியிட்ட கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அண்மையில் சீனாவில் இருந்து புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட போர் டாங்கிகள். போர்முனையில் இரண்டு தடவைகள் பரீட்சித்துப் பார்க்கப்பட்டன.

முதல் பரிசோதனையின் போது டாங்கிகள் நன்கு செயற்பட்டன.

இரண்டாவது பரிசோதனை

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ஸ்ரீலங்காவின் இராணுவச் செலவு தெற்காசியாவில் ஒரு சாதனை!

### அமெரிக்க அரசின் ஆய்வு தரும் தகவல்

1979 இற்கும் 1989 இற்கும் இடைப்பட்ட பத்தாண்டு காலப் பகுதியில் தெற்காசியப் பகுதியில் மிகவும் அதிகமாக ஆயுதங்களைக் கொள்வனவு செய்து ராணுவச் செலவைப் பெருக்கிய ஒரே நாடு ஸ்ரீலங்காதான்.

— அமெரிக்க அரசின் ''ஆயுதக் கட்டுப்பாடு மற்றும் ஆயுதப் பரிகரண நிறுவனம்'' [Arms Control And Disarmament Agency] தனது வருடாந்த அறிக்கையில் இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

144 நாடுகளின் இராணுவச் செலவுகள், ஆயுத ஏற்றுமதி, இறக்குமதி போன்றவை தொடர்பான புள்ளி விவரங்களைத் திரட்டி இந்த நிறுவனம் ஆய்வு நடத்தி வருகிறது.

அந்த ஆய்வின்படி —

1989ஆம் ஆண்டு வரையான பத்தாண்டு காலப் பகுதியில் ஸ்ரீலங்காவின் இராணுவச் செலவு 17·2 சத வீதம் உயர்ந்திருக்கிறது.

இக்காலப் பகுதியில் இந்தியா தனது இராணுவச் செலவை 5·8 வீதமும், பாகிஸ்தான் 9·6 வீதமும் மட்டுமே உயர்த்தியுள்ளன.

இக்காலப் பகுதியில் இரண்டரை வருடங்கள் ஸ்ரீலங்காவின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இந்திய அமைதிப்படை தங்கியிருக்காவிட்டால் ஸ்ரீலங்காவில் இராணுவச் செலவினம் இன்னும் கணிசமான வீதத்தினால் அதிகரித்திருக்கும்.

தெற்காசியப் பகுதியில் இராணுவத்துக்காக அதிக தொகை பணத்தைச் செலவிடும் நாடுகள் வரிசையில் இந்தியா, பாகிஸ்தான் ஆகியவற்றுக்கு அடுத்ததாக இருப்பதும் ஸ்ரீலங்காதான்.

— இப்படி அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ]

## கிழக்கில் இராணுவம் தொடங்கிய பெரும் தாக்குதல் தடைப்பட்டது!

யாழ்ப்பாணம், ஏப். 15

இராணுவத்தினர் கடந்த வெள்ளிக்கிழமை கிழக்கில் பெருமளவில் முடுக்கிவிட்ட இராணுவ நடவடிக்கை விடுதலைப் புலிகளின் பதில் தாக்குதலால் தடைப்பட்டு நிற்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தினரின் நடவடிக்கையின் ஆரம்பத்திலேயே, தாம் நடத்திய இரண்டு அதிரடித் தாக்குதல்களில் படையினருக்குப் பலத்த இழப்புகள் ஏற்பட்டதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த இழப்புகளின் பின்னரே வடக்கு - கிழக்கின் போர்க் களங்களுக்கு பொறுப்பான உயர் அதிகாரிகள் மட்டத்தில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் சுட்டிக் காட்டப்பட்டது.

கிழக்கில் இந்த வருடத்தில் இதுவரை மொத்தம் நான்கு பெரும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. முந்திய மூன்று தாக்குதல்களும் முன்னேற்றம் எதுவுமின்றி தடைப்பட்டன. [அ-3]

## ஈழத் தமிழர்களின் முதுகில் குத்திவிட்டார் ஜெயலலிதா!

### தி. மு. க. பிரமுகர் ஆலடி அருணா சாடுகிறார்

சென்னை, ஏப். 15

விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டால் ஈழத்தமிழினம் அழிந்துவிடும் என அடிக்கடி கூறியவர் ஜெயலலிதா. இப்போது விடுதலைப் புலிகளை அழித்தே தீருவேன் என்று சூளுரைக்கிறார்—அவர் ஈழத் தமிழர்களை அழிக்கத் தயாராகிவிட்டாரா?

—இவ்வாறு கேள்வி எழுப்பினார் தி. மு. க. பிரமுகரும் முன்னாள் எம். பியுமான ஆலடி அருணா.

எழும்பூர் தி. மு. க. இளைஞர் அணியின் ஏற்பாட்டில் அண்மையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் கூறினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

''விடுதலைப் புலிகளை ஒழித்தே தீருவேன்; அவர்களுக்கு ஆதரவாகப் பேசுபவர்களை 'தடா' சட்டத்தின் கீழ் கைது செய்வேன்'' என்றெல்லாம் ஜெயலலிதா இப்போது கொக்கரிக்கிறார்.

இதே ஜெயலலிதா முன்னர் விடுதலைப் புலிகளுக்காகவும் தளபதி பிரபாகரனுக்காகவும் எப்படி வக்காலத்து வாங்கிப் பேசினார் என்பதை மக்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

1988 பெப்ரவரி 22 ஆம் திகதி 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகைக்கு ஜெயலலிதா அளித்த பேட்டியில்—

''ஈழத் தமிழர்களின் நலன் காப்பதற்கு எடுக்கப்படும் எந்த முயற்சியும் விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பின்றி வெற்றி பெறாது'' - ஜெயலலிதா தெரிவித்தார்.

அதே ஆண்டு மார்ச் மாதத்

[4 ஆம் பக்கம் பார்க்க]

### முச்சந்தி முரளி



## செய்திச் சரம்

### புதுவருட தினம் தாக்குதல் நடக்கவில்லை

கொழும்பு, ஏப். 15

தமிழ் - சிங்கள புத்தாண்டு காலத்தில் மோதல் சம்பவங்கள் எதுவுடம் நடக்கவில்லை என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

புதுவருட தினமான திங்களன்றும் அதற்கு முதல் நாளும் ஸ்ரீலங்கா படையினரும் விடுதலைப் புலிகளும் தாக்குதல் நிறுத்தம் ஒன்றைக் கடைப் பிடித்ததாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்சி செய்தி ஒன்று தெரிவித்தது. [உ-10]

### கான்ஸ்டபிள் மரணம்

கொழும்பு, ஏப். 15

மட்டக்களப்பு பாலைமுனை முகாமில் இருந்து ஆரைப்பற்றைநோக்கி டிராக்டரில் சென்று கொண்டிருந்த பொலிஸார் மீது விடுதலைப் புலிகள் கடந்த புதன்கிழமை தாக்குதல் நடத்தினர். இதில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்தார். மேலும் ஒருவர் காயமடைந்தார். [உ-த]

### படையினர் தாக்குதலில் 12 பேர் காயம்

கொழும்பு, ஏப். 15

கடந்த புதனன்று மட்டக்களப்பு பாலைமுனைச் சந்திக்கு அருகில் உள்ள அரிசி ஆலைக்குள் புகுந்த படையினர், அங்கிருந்த பொதுமக்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்களை நடத்தினர்.

இந்தத் தாக்குதல்களினால் 12 பொதுமக்கள் காயமுற்றனர். காயமுற்றோர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டதாக அறிய வந்தது. [உ-த]

### தமிழர் சூட்டுக்குப் பலி!

யாழ்ப்பாணம், ஏப். 15

மட்டக்களப்பு, ஊறணியில் கடந்த சனியன்று படையினர் பொதுமக்கள் மீது மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தில் தமிழர் ஒருவர் கொல்லப்பட்டார்; ஐவர் காயமடைந்தனர்.

படையினர் மக்கள் மீது கண்டபடி துப்பாக்கிப் பிரயோகம் செய்யும் சம்பவங்கள் கிழக்கில் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

### கூரை விழுந்து இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஏப். 15

ஷெல் தாக்குதலினாலும், விமானக் குண்டு வீச்சு அதிர்வினாலும் சேதமுற்றிருந்த பழைய வீடு ஒன்றின் கூரை திடீரென நள்ளிரவில் இடிந்து வீழ்ந்தது. இதனால் வீட்டினுள் நித்திரையிலிருந்த தாயும் மகளும் காயமுற்றனர்.

இந்தச் சம்பவம் கொழும்புத்துறை கிழக்குப் பகுதியில் நேற்று அதிகாலை 12-30 மணிக்கு இடம்பெற்றது.

கனகசபாபதி இராசலட்சுமி [வயது 48], அவரது மகள் கோமளச்செல்வி [வயது 15] ஆகியோரே காயமுற்ற நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். [உ-15-30]

### நாளையும் மறுதினமும் கடைகள் மூடியிருக்கும்

யாழ்ப்பாணம், ஏப். 15

யாழ். மாவட்டத்தில் உள்ள வர்த்தக நிலையங்களை நாளையும், நாளை மறுதினமும் மூடுமாறு யாழ். வர்த்தகர் சங்கமும், யாழ். மாவட்ட வர்த்தக ஊழியர் சங்கமும் கேட்டுள்ளன.

சித்திரா பௌர்ணமி, பெரியவெள்ளி ஆகிய தினங்களுக்காகவே வர்த்தக நிலையங்களை மூடுமாறு கேட்கப்பட்டிருக்கிறது. (உ-3)

### பூநகரியில் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஏப். 15

பூநகரி, கல்முனை, ஞானிமடம் பகுதிகளில் இருந்து நேற்று முன்தினம் இரவு படையினர் குடியிருப்புக்களை நோக்கி 50 கலிபர் தாக்குதலை நடத்தினர்.

இதனிடையில்—

மாவிட்டபுரம், தச்சன்காடு பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் நேற்று முன்தினம் அதிகாலை 1-30 மணியில் இருந்து காலை 7 மணி வரை சுற்றுப் புறக்குடியிருப்புப் பகுதிகளை நோக்கி விட்டு விட்டு ஷெல் மற்றும் துப்பாக்கிப் பிரயோகங்கள் மேற்கொண்டனர். [உ-3-15]

### மின்வெட்டு தெற்கில் நீடிப்பு

கொழும்பு, ஏப். 15

தென்னிலங்கையில் மின்வெட்டு நேற்று முதல் தினசரி நாலரை மணித்தியாலங்களாக நீடிக்கப்பட்டிருக்கின்றது.

பகலில் மூன்றரை மணித்தியாலங்களும் இரவில் 7 மணிக்கும் 11 மணிக்குமிடையே ஒரு மணித்தியாலமும் மின்வெட்டு அமுலாகுமென மின்சார சபை தெரிவித்துள்ளது. (உ-10)

### மீண்டும் காங்கேசனுக்கு வாகன அணி

யாழ்ப்பாணம், ஏப். 15

காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்தில் இருந்து உணவுப் பொருள்களை எடுத்து வருவதற்கான வாகன அணி மீண்டும் நாளை முதல் அங்கு செல்லவிருக்கிறது.

வாகன அணி காங்கேசனுக்குச் செல்வது கடந்த ஒரு வாரமாக தடைப்பட்டிருந்தது தெரிந்ததே. [உ-3]

### நோயாளரை பதிவு செய்ய கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 15

கொழும்பில் சிகிச்சை பெறுவதற்கு டாக்டர்களினால் சிபார்சு செய்யப்பட்ட நோயாளர்கள் கொழும்பு செல்வதற்காக தம்மைப் பதிவு செய்துகொள்ளும்படி யாழ். போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

எதிர்வரும் 20, 21 ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் மாலை மூன்று மணி வரை தகுந்த ஆவணங்களுடன் நோயாளரோ அல்லது அவரது நெருங்கிய உறவினர்களோ சென்று பதிவு செய்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-15)

### யானை முறித்த மரத்தில் மோதி மூவர் காயம்

யாழ்ப்பாணம், ஏப். 15

புதுவருட தினத்திற்கு தாய் வீடு சென்ற ஒரு குடும்பத்தினர், யானை முறித்த மரத்தில் எதிர்பாராத விதமாகத் திடீர் என மோதுண்டு காயமுற்றனர்.

பூநகரி வேரவில் வீதி பன்னிரண்டாம் கட்டையடியில் திங்கள் பிற்பகல் 4 மணிக்கு நடந்த இவ்விபத்தில் மூவர் காயமுற்றனர்.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகளை தடை செய்வதா? இந்தியா தீவிர பரிசீலனை

### பிரதமர் நரசிம்மராவ் கூறுகிறார்

சென்னை, ஏப். 15

இந்தியாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்வதா என்பது குறித்து மத்திய அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்து வருகிறது.

பிரதமர் பி. வி. நரசிம்மராவ் நேற்று சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

ஆந்திர மாநிலம் — திருப்பதியில் நேற்று ஆரம்பமான மூன்று நாள் இந்திரா காங்கிரஸ் தேசிய மாநாட்டில் கலந்து கொள்வதற்காக திரு. நரசிம்மராவ், பாதுகாப்பு அமைச்சர் சரத் பவார், நிதி அமைச்சர் டாக்டர் மன்மோகன் சிங் ஆகியோருடன் சென்னை மார்க்கமாக திருப்பதி சென்றார். அப்போது சென்னை விமானநிலையத்தில் செய்தியாளர்களை பிரதமர் ராவ் சந்தித்தார். [உ-எ]

### காங்கிரஸ் தீர்மானம்

கடல் கடந்து வரும்— துப்பாக்கி ஏந்திய— தீவிரவாதிகளால் எமது மக்கள் பணயம் வைக்கப்படுவதை எமது நாடு ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது.

இந்திரா காங்கிரஸ் கட்சி இவ்வாறு அறிவித்திருக்கிறது.

திருப்பதியில் நடைபெறும் காங்கிரஸ் மாநாட்டின் அரசியல் தீர்மானம் நேற்றிரவு வெளியிடப்பட்டது. அந்தத் தீர்மானத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## நகரில் அன்னை பூபதியின் திருவுருவப்படம் பவனி

யாழ்ப்பாணம், ஏப். 15

அன்னை பூபதியின் நான்காவது ஆண்டினை நினைவு கூருமுகமாக இடம்பெற்று வரும் நிகழ்ச்சிகளில் ஓர் அங்கமாக அன்னையின் திருஉருவப்பட அலங்கார ஊர்தி பவனியும் நேற்று யாழ். நகரில் இடம்பெற்றது.

யாழ். வட்டவையினர் இந்த அலங்கார ஊர்தி பவனியை ஏற்பாடு செய்திருந்தனர்.

யாழ். வண்ணார்பண்ணை முருகமூர்த்தி கோவிலிலிருந்து மங்கள வாத்தியங்கள் சகிதம் ஆரம்பமான இந்த ஊர்வலம் யாழ். நகரின் முக்கிய வீதிகளினூடாகச் சென்றது.

அலங்கார ஊர்தி சென்ற வீதிகள் தோறும் மக்கள் குழுமி நின்று அஞ்சலி செய்தனர். வீடுகள் தோறும் நிறைகுடங்கள் வைக்கப்பட்டிருந்ததையும் காண முடிந்தது.

அன்னையின் திருவுருவப் படத்திற்கு மக்கள் மலர்கள் தூவி அஞ்சலிசெலுத்தினர். (த-15)

## லிபியாவில் இன்று முதல் விமானங்கள் இறங்கத்தடை!

### ஐ. நா. உத்தரவு அமுலுக்கு

வாஷிங்டன், ஏப். 15

லிபியா மீது ஐ. நா. பாதுகாப்புச் சபை விதித்துள்ள விமானப் போக்குவரத்து மற்றும் ஆயுதக் கொள்வனவுத் தடை இன்று புதன்கிழமை] முதல் அமுலுக்கு வருவது பெரும்பாலும் நிச்சயமாகி விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டு 'பான்—அம்' விமானங்களைக் குண்டு வைத்துத் தகர்த்த சம்பவங்கள் தொடர்பாக தேடப்பட்டு வரும் இரண்டு லிபிய இரகசிய பொலிஸாரை அமெரிக்கா அல்லது பிரிட்டனிடம் ஒப்படைக்க லிபியா மறுத்து வருவதைத் தொடர்ந்து, ஐ நா. பாதுகாப்புச் சபை இத்தடையை விதித்திருக்கிறது.

ஏப்ரல் 15க்கு முன்னர் அந்த இரண்டு லிபியர்களையும் லிபியா ஒப்படைக்காத பட்சத்தில் திட்டமிட்டபடி தடை அமுல் செய்யப்படும் என்று ஐ.நா. பாதுகாப்புச் சபை காலக்கெடு விதித்திருந்தது.

எனினும் இரண்டு லிபியர்களையும் நடுநிலை நாடான மால்டாவிடம் ஒப்படைக்கத் தயாராகவிருப்பதாக லிபிய அரசு நேற்று அறிவித்தது.

லிபியாவின் இந்த அறிவிப்பை அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் நிராகரித்துள்ளன. [உ-எ]

## சர்வதேச நீதிமன்றத்தினால் லிபியாவின் மனு நிராகரிப்பு

ஹேக், ஏப். 15

லிபியாவின் இரகசியப் பொலிஸார் இருவரை அமெரிக்கா மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஆட்சேபித்து லிபியா தாக்கல் செய்திருந்த மனுவை சர்வதேச நீதிமன்றம் நேற்று நிராகரித்துத் தீர்ப்பு வழங்கியது.

இவ்விவகாரம் தொடர்பாக தமது நாட்டின் மீது அமெரிக்காவும் பிரிட்டனும் மிரட்டல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றன என்றும்—

அந்த நடவடிக்கைகளைக் கைவிடும்படி அந்த நாடுகளுக்கு உத்தரவிடும்படி கோரியும் லிபியா சர்வதேச நீதிமன்றத்தில் இம்மனுவைத் தாக்கல் செய்திருந்தது. (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

12-4-92 காலை திருநெல்வேலிச் சந்தியில் பாலசுந்தரம் அருள் நேசராணியின் அடையாள அட்டை, வவுனியா வியாபார பாஸ், சைக்கிள் திறப்பு ஆகியன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தகவல் தரவும் அருள் நேசராணி, C/o S. ஜெகநாதன், குளுக்கண்டி லேன், கட்டப்பராய், கோப்பாய் தெற்கு. (20469)

### இலவச திருமண சேவை

29 வயது, மகம் 2, செவ்வாய் 8, அழகிய விரிவுரையாளருக்கு ஏற்ற மணாளன் தேவை. உள்ளூர், அவுஸ்திரேலியா மணமக்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம். ஞாயிறு காலையில் சந்திக்கலாம் த. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. [4654]

32 வயது, அத்தம் 4, செவ்வாய்க்குற்றமற்ற ஆசிரியைக்கு மணாளன் தேவை. இலங்கை, வெளிநாடு விரும்பத்தக்கது. சந்திப்பு ஞாயிறு காலையில் மட்டும். த விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [4655]

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் வெற்றி தருமா? விவாகம் நடைபெறுமா? வெளிநாடு போகலாமா? உங்கள் வினாக்களுக்கு உரிய பதில் அளிக்கப்படும். ஜாதகம், குறிப்பு எழுதிப் பலன் சொல்லப்படும். கைரேகை, விவாகப் பொருத்தம், எண்சோதிடம் பார்த்துச் சொல்லப்படும். தொடர்பு: த. சிவானந்தன் பிரபல சோதிடர், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. [20406]

### THE SPORTS STAR

மாசி மாத 21 ஆம், 28 ஆம் திகதிகளுக்குரிய World Cup-Sports Star சஞ்சிகை வெளிவந்து விட்டது. தொடர்பு: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [சி-1867]

### கணிதம் - தனிப்பட்ட வகுப்புகள்

கணிதம் கற்பித்தலில், நீண்ட கால அனுபவம் வாய்ந்த O/L 90 கணிதத்தில் பல திறமைச் சித்திகளுக்கு வழிகோரிய ஆசிரியரால் புதிய பிரிவுகள் நடத்தப்படஉள்ளது. ஆரம்ப அறிவே இல்லாதோருக்கு விசேடமாகக் கவனிப்பு, திறமைச் சித்திக்கு உத்தரவாதம் மற்றும் வகுப்புகளும் நடைபெறுகின்றன க. பரராசசேகரன், 8, பிளச்சர்ஸ் ஒழுங்கை, சுண்டிக்குளி. [20473]

### மணப்பெண்கள் தேவை

U. K., கனடா, சுவிஸ், டுபாய், நோர்வே, டென்மார்க், ஆஸ்திரேலியா நாடுகளில் வேலை செய்பவர்களுக்கு மணப் பெண்கள் தேவை. தொடர்பு: கு. திருவிளங்கம், 16/16, வளன்புரம், கொழும்புத்துறை (வார நாட்களில் 2 மணி வரை சந்திக்கலாம்.) [20440]

## விரைவில் நட்டஈடு

கொழும்பு, ஏப். 15 மட்டக்களப்பு விமான நிலைய விஸ்தரிப்புக்காக அரசினால் சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கும், வீடுகளுக்குமான நட்டஈடு வெகு விரைவில் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. [இ-எ]

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் 1991/92 கல்வியாண்டிற்கு பின்வரும் கற்கை நெறிகளுக்கு வெளிநிலைத் தேர்வு நாடியாக பதிவு செய்ய விருப்புடைய தகைமை பெற்றவர்களிடம் இருந்து 1992 ஜூன் 6 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

1. வர்த்தக முதற்கற்கை நெறி
2. கலை முதற் கற்கை நெறி
3. பொதுக் கலைமாணி பகுதி 1
4. சிறப்புக் கலைமாணி பகுதி 1
5. வர்த்தகமாணி பகுதி 1

பின்வரும் பாடங்களில் மாத்திரம் சிறப்புக் கலைமாணி கற்கைநெறிக்குப் பதிவு செய்து கொள்ளலாம். (இந்துநாகரிகம், வரலாறு, புவியியல், பொருளியல், மெய்யியல், அரசறிவியல், தமிழ், நுண்கலை, நாடகமும் அரங்கியலும், சமஸ்கிருதம், கிறிஸ்தவ நாகரிகம்)

விண்ணப்பப் படிவங்களுக்கு உரிய விவரங்களும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் வெளி நிலைப் பதிவு தேர்வு அலுவலகத்தில் இருந்து நேரடியாகவோ தபால் மூலமாகவோ 1992 ஏப்பிரல் 20 ஆம் திகதி தொடக்கம் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவத்தையும் பாடத் திட்டத்தின் பிரதியையும் நேரடியாக பெற விரும்புவோர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிறாப்பரிடம் 50/- ரூபா செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும். தபால் மூலம் விண்ணப்பப் படிவத்தையும் பாடத்திட்டத்தின் பிரதியையும் பெற விரும்புவோர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தல் நிதியாளருக்கு எழுதப்பட்ட காசுக்கட்டளை / தபாற் கட்டளையுடன் சுய முகவரியிட்டு ரூபா 12/- பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28x20 செ. மீ. அளவுடைய தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

1990/91 கல்வி ஆண்டிற்காக ஏற்கனவே பதிவு செய்துள்ளோருக்கு இவ்வறிவித்தல் ஏற்புடையதல்ல

- பதிவாளர்.

யாழ்ப்பாணப் ல்கலைக்கழகம்.
07-04-1992.
[சி-1910]

## பாரதிதாசன் கல்வி நிறுவனம் (BECON)

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

### A/L 94
பிரிவு - I

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. வரதராஜன் |
| அளவையியல் | — | திரு. S. S. மனோகரன் |
| கணக்கியல் { | — | திரு. யோகராஜா |
| | — | திரு. சௌந்தி |
| வர்த்தகம் | — | பிரபல ஆசிரியர் |
| தமிழ் | — | திருமதி மீரா |
| இந்து நாகரிகம் | — | திரு. பாலா |
| புவியியல் | — | திரு. ஜோசப் |
| அரசியல் | — | திரு. பஞ்சாட்சரம் |

ஆரம்பம்: 18 - 04 - 1992
சனி காலை 8-00 மணி

A/L 93 புதிய பிரிவு
ஆரம்பம்: 18 - 04 - 1992
சனி காலை 8-00 மணி

[சி-1871]

## கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் - 1991

இடம்: கல்லூரி மண்டபம்
காலம்: 16 - 04 - 1992 வியாழன் பிற்பகல் 3.00 மணி

கல்லூரியின் பழைய மாணவர்கள் அனைவரும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

★ இவ் வருடத்திற்கான அங்கத்துவப் பணம் 10 ரூபாவை இதுவரை செலுத்த தவறியவர்கள் கூட்டத்திற்கு முன் அலுவலகத்தில் செலுத்துமாறு அன்புடன் கேட்கப்படுகின்றீர்கள்.

த. முத்துக்குமாரசுவாமி,
தலைவர்.

பொ. விக்னேஸ்வரலிங்கம்,
செயலாளர். [20471]

## எடிசன் அக்கடமி

[யாழ். இந்து அருகில்]
411/1, K. K. S. வீதி, யாழ்ப்பாணம்.

### O/L DAY CALSSES

செவ், வியா, சனி, ஞாயிறு 8 – 8 மணி

| | |
|---|---|
| கணிதம்: | பாஸ்கரன் (பல்கலைக்கழகம்) |
| விஞ்ஞானம்: | J. R. சூரி; J. J. கொலின்ஸ் |
| ச. கல்வி: | K. S. முத்துலிங்கம் |
| தமிழ்/சமயம்: | தங்கவேல்; வாமன் |
| ஆங்கிலம்: | அந்தோனிப்பிள்ளை |
| வர்த்தகம்: | ராஜ் (பல்கலைக்கழகம்) |

ஆரம்பம்: 15-04-1992
[இன்று] 8 மணி

[20451]

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் நாகமணி சிவஞானம்

அன்னையின் அரவணைப்பில்: 30 - 05 - 1944
இறைவனின் திருப்பாதத்தில்: 12 - 05 - 1987

எம்மை விட்டுப் பிரிந்தாலும் எம் மனதை விட்டகலாத மகனே! எம் வாழ்வுக்கு வழிகாட்டிய இல்லக்குல மகனே! எங்கள் நலம் பேணி எல்லோருக்கும் சேவை செய்து பொங்கும் புகழோடு பூரித்து வாழ்ந்தனையே! தங்கும் இடம் எல்லாம் தன் புகழ் சேர்த்தனையோ! கோயில் திருப்பணிகள் ஊருக்கு நற்பணிகள் ஓயாமல் உறங்காமல் உயிர் மூச்சாய்ச் செய்தனையோ! செய்பணியும் சேவைகளும் தொண்டுகளும் கண்ட பலன் ஐயகோ! கணப்பொழுதில் ஆள் இல்லையே என்பதுவோ? கோபுரமாய் வாழ்ந்த எம் குடும்ப தலைமகனே! எம் குடும்ப நிலை குலைந்து தாவு கொம்பு இல்லாது தளிர்கொடியாய் ஆனதுவோ என் மகனே!

உமது ஆத்மா சாந்திக்குப் பிரார்த்திக்கும்:

[பெற்றோர்] அப்பா, அம்மா, மனைவி, மகன், சகோதரர்கள், மைத்துனர்கள், மருமக்கள், உறவினர்கள்.

புதுக்[illegible],
தெல்லிப்பழை. (4659)

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 25—09—1990
மறைவு: 26—04—1991

### கமலநாதன் நந்தராஜ்

திதி: 15—04—1992

என் மகனே! ஓர் ஆண்டு சென்றாலும்
உன் நினைவு மாறாது மகனே!

உம் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, அன்ரா,
சுஜன் அண்ணா, மைத்துனர்,
உற்றார், உறவினர்கள்.

பாடசாலை ஒழுங்கை,
ஆறுகால் மடம்,
ஆனைக்கோட்டை. [20476]

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் சூசைமுத்து யேசுராசா (யேசு)

மலர்வு: 14–03–1962
உதிர்வு: 15–04–1989

யாரிடம் செல்வோம் யாரிடம் - சொல்வோம்
எமக்கெல்லாம் நீ தானே!
கண்ணை இமை காத்தது போல் - காலம் எல்லாம்
எமைக் காத்து வந்தாயே!
எம் இதய தெய்வமே!- எம் குடும்ப ஒளிவிளக்கே!
எம்மை எல்லாம் வழி நடத்திய அன்பு மகனே!

உமது ஆத்மா சாந்தியடைய
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

பிரிவால் துயருறும்:
ஐயா, அம்மா, அக்கா,
தம்பிமார், அத்தான், மருமக்கள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

யாழ். பல்கலைக்கழக ஒழுங்கை,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். [20474]

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
### உருக்குமணி இராசரத்தினம்
[இளைப்பாறிய ஆசிரியை, வேலணை]

தோற்றம்: 15-06-1914
மறைவு: 02-05-1985

திதி: 15—04—1992

அன்னைபிரிந் தேழாண்டு மக்க ளெண்ணி
அம்மாவென் றோதாத நாட்க ளில்லை
நன்மைகளை மருமக்கள் பேர மக்கள்
நண்பருற வினரோதி வாழ்த்து கின்றார்
இன்னுந்தா னுருக்குமணி துணைவர் ராச
இரத்தினமும் பிரிவினா லேங்கு கின்றார்
பின்னருமுன் சந்ததிக்குப் புகழைத் தேடும்
பூட்டியரும் வாழ்த்துவார் சாந்தி தானே.

கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டிமார்.

121, 2ஆம் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம். [20470]

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

O/L
பிரிவு 2 DAY CLASSES (8 - 3)
பிரிவு - 3 EVENING CLASSES (3-6)
பிரிவு - 2 SAT., SUN. CLASSES (8 3)

ஆரம்பம்: 16—04—1992

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | திரு. J. R. சூரி |
| கணிதம் | — | திரு. ஜெகன் |
| ஆங்கிலம் | — | திரு. விஸ்வநாதன் |
| வரலாறும் சமூகக்கல்வியும் | — | திரு. கோபி |
| தமிழ் | — | திரு. சிவா |
| வர்த்தகம் | — | திரு. கருணாகரன், திரு. கோபி |
| சமயம் | — | திரு. சங்கர் |

கு. குறிப்பு:
★ கடமை, கட்டுப்பாட்டுடன் நடத்தும் ஒரே நிறுவனம்
★ விடுதி வசதி செய்து கொடுக்கப்படும்
★ அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும். [சி-1838]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### தலையிடி அவருக்குத் தானா?

அம்பாறை மற்றும் மஹரகமவில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்கள் ஜே.வி.பியினரின் காலத்தை நினைவுபடுத்துவனவாக ஜனாதிபதி திரு. பிரேமதாசா தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் ஆகியவற்றின் போது ஜே.வி.பியினர் தெற்கை ஆட்டிப் படைத்தார்கள். அதனால் அரசியல்வாதிகள் குலை நடுக்கத்துடன் காலத்தைத் தள்ள வேண்டியதாயிற்று.

ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.க. சார்பில் போட்டியிட்ட பிரேமதாசா அந்த வேளை எவ்வாறு மனப்பீதி அடைந்திருப்பார் என்பதை எவரும் இலகுவில் ஊகித்துக் கொள்ளலாம். அதன் பாதிப்பு இப்போது பிரதிபலிக்கிறது!

தெற்கில் ஒரு குண்டு வெடித்ததும் அவருக்குப் பழைய ஞாபகம் வந்துவிட்டது. அந்தளவுக்கு அவர் அப்போது பீதிக்கப்பட்டிருக்கிறார்! தலையிடியோ, காய்ச்சலோ அது எவ்வளவு சிறிய நோயாக இருந்தாலும் அதனை அனுபவித்தவனுக்குத்தான் வேதனை தெரியும்.

ஜே.வி.பியின் நடவடிக்கைகளால் அரசியல்வாதிகள், குறிப்பாக அரசாங்க (ஐ.தே.க.) அரசியல்வாதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். அந்தக் கட்சியின் ஆதரவாளர்களும் பாதிக்கப்பட்டார்கள்.

அதேபோல ஐ.தே.க. அமைச்சர்கள், பிரமுகர்கள் உருவாக்கியதாகக் குற்றஞ் சாட்டப்படும் கறுப்புப் பூனைகள் படையால், ஐ.தே.கட்சிக்கு விரோதமானவர்கள் பாதிக்கப்பட்டார்கள்.

ஜே.வி.பியால் பாதிக்கப்பட்ட பிரேமதாசாவுக்கு கறுப்புப் பூனைகளால் பாதிப்புற்ற– நிர்க்கதிக்குள்ளான - மக்களின் துன்பம் நிச்சயம் புரிந்திருக்க வேண்டும். ஜே.வி.பியின் நடவடிக்கைகளால் அவர் கண்ட அனுபவம் அதற்கு உதவியிருக்கும்.

ஆனால் அவர் கறுப்புப் பூனைகளால் பாதிக்கப்பட்ட மக்களின் துன்பத்தைப் புரிந்தவராக ஒருபோதும் வெளியே காட்டிக்கொண்டதில்லை. கருத்துக் கூறியதாகவும் இல்லை.

திரு. பிரேமதாசாவின் சொந்த இராணுவமும் ஏனைய படைகளும் வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மக்கள் மீது புரிந்து வரும் கொடுமைகளை, அனர்த்தங்களை, விளைவிக்கும் இன்னல்களையும் அவர் உணர்வார். ஆனால் அதனையும் வெளிக்காட்டுவதில்லை. பாதிக்கப்படும் தமிழ் மக்களுக்குச் சாதகமாகக் கருத்துக் கூறுவதும் இல்லை.

போர் வீணானது, போரில் எவருமே வெல்ல முடியாது— என்றெல்லாம் கூறுகிறாரே தவிர, தமிழ் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள், நிர்க்கதிக்கு ஆளாகிறார்கள் என்று கூறுகிறார்கள் இல்லை.

தனக்கு வந்தது தான் தலையிடி, ஐ.தே.க.வுக்கு எதிரானவர்களான தனது (சொந்தச்) சிங்கள மக்களுக்கு வந்ததும், தமிழ் மக்களுக்கு வந்திருப்பதும் தலையிடி அல்ல சிறு நோவு தான் என்று ஜனாதிபதி கருதுகிறார் போலும்!

ஜே.வி.பியும், கறுப்புப் பூனைகளும் சட்டபூர்வமற்றவை. ஆனால் வடக்கு கிழக்கில் அட்டூழியம் புரியும் முப்படைகளும் சட்டபூர்வமானவை. எனினும் அவை அவ்வாறு நடந்து கொள்ள திட்டம் செய்பவரும் அங்கீகாரம் வழங்குபவரும் ஜனாதிபதியே. முப்படைகளின் அதிபதியாகத் திரு. பிரேமதாசாவே இருக்கிறார்! ஆகையால் தமிழர்களுக்குத் தலையிடி கொடுப்பவர் அவரே.

தமிழர்களுக்கு வந்துள்ள தலையிடியையும் தனக்கு (தமது கட்சிக்காரருக்கும்) வந்த தலையிடியையும் ஒன்றாகக் கருதக் கூடிய மனப்பக்குவம் அவருக்கு வருமா?

அவர் ஜனாதிபதி பதவி மீது வைத்திருக்கும் ஆசை அறும் வரைக்கும் அவருக்கு அந்த மனிதாபிமானம் பிறக்கும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை!

# புதிய ராணுவக் கட்டமைப்பு; செயற்பாடு குறித்து விளக்கம்

படைகளின் கட்டமைப்பில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களை அடுத்து இராணுவச் செயற்பாடுகள் எவ்வாறு அமையும் என்பது குறித்து ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் செய்தியாளர் மாநாட்டில் விளக்கமளித்தார்.

ஜனாதிபதியின் தீர்மானங்களை அமுல் நடத்துவதற்கு மாற்றத்துக்குள்ளான இராணுவக் கட்டமைப்பில் பொதுக்கட்டளைப்பீட அதிகாரி [General officer Commanding (GOC)] ஒருவர் இருப்பார்.

★ முக்கிய முடிவுகளை முப்படைகளின் தளபதிகள் எடுப்பார்கள். கூட்டுப்படைகள் தலைமைப்பீடம் அவற்றை கீழ் மட்டத்திற்கு அனுப்பி வைக்கும்.

— இவ்வாறு பிரட்மன் வீரக்கோன் கூறினார்.

அவர் இவ்வாறு விளக்கமளித்ததும் செய்தியாளர் ஒருவர் பின்வருமாறு கேள்வி எழுப்பினார்.

"ஜனாதிபதியின் செய்திகளை வாங்கி விநியோகம் செய்யும் 'தபால் பெட்டி'யாக கூட்டுப்படைகள் தலைமை அலுவலகம் இருக்கும் என்று சொல்கின்றீர்களா" என்று செய்தியாளர் கேட்டார்.

அதற்கு அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க பதிலளித்தார்.

இராணுவத் தளபதியின் கீழ் முன்னர் இருந்த துருப்புகளின் எண்ணிக்கையிலும் பார்க்க, கூடுதல் துருப்புகள் திரு. கொப்பேகடுவவின் கீழ் இல்லை. எம்மிடம் உள்ளது சிறிய இராணுவமே. கூட்டுப்படைகள் தலைமைப்பீடம் ஒரு பிளாட்டூனை மட்டும் நகர்த்திய காலமும் முன்னர் இருந்தது.

பாதுகாப்புப் படையினரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அதனால் நிலை மாறிவிட்டது. மாற்றங்கள் பற்றி நாம் ஆராய்ந்து வந்துள்ளோம். எல்லாப் படையினரையும் நாம் ஒன்றாகக் கொண்டு வருகின்றோம்,

முன்னர் இருந்த அமைப்பின் கீழ் ஒரு படையின் தளபதி தமக்கு தொடர்பில்லை என்று கூற முடியும். கூட்டுப்படைகள் தலைமை அலுவலகம் தான் பொறுப்பு என்றும் அத்தளபதி கூறமுடியும்; புதிய மாற்றத்தின் படி ஒவ்வொருவரும் 'குழந்தை'யை காவிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது; இனி பொறுப்பைத் தட்டிக் கழிக்க முடியாது.

கேள்வி: இப்போது 'குழந்தை' [பொறுப்பு] தனது பொறுப்பில் இல்லை என்று கூட்டுப்படைகள் தலைமை அலுவலகம் கூற முடியும் அல்லவா?

ரணில்: இல்லை. கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் கட்டளைகளைச் செயற்படுத்துகிறது; அது அப்படியே தான் இருக்கும். ஆயுதப் படைகளின் பிரதம தளகர்த்தர் என்ற கோதாவில் ஜனாதிபதி முடிவுகளை எடுப்பார். கூட்டுப்படைகள் தலைமை அலுவலகம் ஆரம்பமானபோது அதன் கீழ் ஒரு படையணி கூட இருக்கவில்லை இன்று மூன்று டிவிஷன்கள் உள்ளன. கூட்டுச் செயற்பாட்டுக் கவுன்ஸில் மற்றும் ஜனாதிபதியின் முடிவுகள் ஆகியவற்றில் இருந்து கிடைக்கும் அதிகாரங்களை ஜெனரல் வனசிங்கா பெறுகின்றார்.

— இப்படி திரு விக்கிரமசிங்கா விளக்கமளித்தார்.

இராணுவக் கட்டமைப்பில் மாற்றங்கள் செய்யப்பட்ட பின்னர் நடந்த முதலாவது கூட்டுச் செயற்பாட்டுக் கவுன்ஸில் கூட்டத்துக்கு ஜனாதிபதி தலைமை வகித்தார் என்று திரு. பிரட்மன் வீரக்கோன் சொன்னார். [உ-எ]

## உலகத் திருக்குறள் மாநாடு

கொழும்பு, ஏப். 15

எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில் சென்னையில் உலக திருக்குறள் மாநாடு நடத்தப்பட இருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

ஆகஸ்ட் 7 ஆம், 8 ஆம், 9 ஆம் திகதிகளில் சென்னை வசந்த மஹால் மண்டபத்தில் இம் மாநாடு நடைபெறும் என்றும் —

உலக மக்கள் ஒன்றுபட்டு இன்புற்று வாழ்வதற்கு அறிவியல் அடிப்படையில் தமிழ் மறை காட்டும் வழி என்பதே மாநாட்டின் கருப்பொருளாக அமையும் என்றும் —

உலக தமிழ்மறைக் கழகத்தின் தலைவரும், தலைமை அமைப்பாளருமான பண்டிதர் கா. பொ. இரத்தினம் தெரிவித்தார்.

இம் மாநாட்டுச் செயலகம் — எச் 15/11, கலாஷேத்திரக் குடியிருப்பு, பெஸன்ட் நகர், சென்னை — 90 என்ற விலாசத்தில் அமைந்துள்ளது. [இ-எ]

## மட்டக்களப்பில் பழிவாங்கல் நடவடிக்கை இருக்கமாட்டாதாம்

கொழும்பு. ஏப்.15

மட்டக்களப்பு மாவட்டத்தில் பழிவாங்கல் நடவடிக்கையில் இருந்து பொது மக்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இப்படி மட்டக்களப்பு பொலீஸ் அத்தியட்சகர் நிஹால் கருணாரத்னா உறுதி அளித்திருக்கிறார்.

மட்டக்களப்பு சமாதானக் குழு, இம் மாவட்டத்தின் அண்மைக்கால நிலவரம் குறித்து திரு. கருணாரத்னாவுடன் பேச்சுக்கள் நடத்திய போதே அவர் இந்த உறுதி மொழியை அளித்தார் என்று கூறப்படுகிறது.

அண்மைக் காலத்தில் அப்பாவிப் பொதுமக்கள் தாக்கப்பட்டதும், பழிவாங்கல் நடவடிக்கைகள் ஆகியன பற்றி சமாதானக் குழு பொலீஸ் அத்தியட்சகரிடம் எடுத்து விளக்கியது.

இத்தகைய சம்பவங்கள் இனிமேல் இடம்பெறாமல் இருக்க ஸ்திரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று பொலீஸ் அத்தியட்சகர் உறுதியளித்தார். [இ-எ]

## பங்காரப்பா ராஜினாமா

கர்நாடக முதலமைச்சர் எஸ். பங்காரப்பா அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் இருந்து நேற்று ராஜினாமாச் செய்து விட்டார்.

காங்கிரஸ் கட்சியின் மாநிலப் பிரிவில் உள்ள அதிருப்தியாளர் சிலர் அகில இந்திய காங்கிரஸ் செயற்குழுவில் சேர்த்துக்கொள்ளப்பட்டது குறித்து திரு. பங்காரப்பாவின் ஆதரவாளர்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டுள்ளது என்றும் —

இதன் காரணமாகவே அவர் கமிட்டி உறுப்பினர் பதவியில் இருந்து விலகினார் என்றும் அறிவிக்கப்படுகின்றது. [இ-எ]

## பரிசளிப்பு விழா

தமிழீழ ஆய்வு நிறுவனத்தினால் நடத்தப்பட்ட வதிவிட வேளாண்மைப் போட்டியில் பிரிவு மட்டங்களிலும், மாவட்ட மட்டத்திலும் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள், இன்று புதன் கிழமை வழங்கப்பட உள்ளன. இன்று மாலை 7 மணிக்கு கோண்டாவில் போக்குவரத்துச் சாலைக்கு முன்பாக உள்ள கலைவாணி விளையாட்டு மைதானத்தில் இது தொடர்பான வைபவம் நடைபெறும். [இ]

ஊர்காவற்றுறை தபால் நிலையத்தில்

# உடைத்து பார்க்கப்பட்டே கடிதங்கள் ஒப்படைப்பு!

### தபால் அதிபரே பியோனாகவும் கடமை

கொழும்பு, ஏப். 15

ஊர்காவற்றுறைக்கு வரும் கடிதங்கள் அனைத்தும் உடைத்துப் பார்க்கப்பட்ட பின்பே என்னிடம் ஒப்படைக்கப்படுகின்றன. இந்தக் கடிதங்களைத் தரம் பிரிக்கும் வேலையையும், கடிதங்களை விநியோகிக்கும் வேலையையும் நானே செய்கிறேன்.

சமீபத்தில் ஊர்காவற்றுறைக்குச் சென்ற கொழும்புச் செய்தியாளர்களிடம் ஊர்காவற்றுறை தபால் அதிபர் திரு. எஸ். நல்லநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

கொழும்பு மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் பணி புரிந்து வந்த திரு. நல்லநாதன் சென்ற பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி ஊர்காவற்றுறை தபால் அதிபராகப் பதவி ஏற்றார்.

செய்தியாளர்களின் கேள்விகளுக்கு அவர் மேலும் பதில் அளிக்கையில், கடற்படையினர் கொழும்பில் இருந்து கொண்டுவரும் கடிதங்களை அவர்களிடம் இருந்து ஈ.பி.டி.பியினர் பெற்று தன்னிடம் ஒப்படைக்கின்றனர் என்றும் தெரிவித்தார்.

கடிதங்கள் உடைக்கப்பட்டு பார்க்கப்பட்ட பின்னரே தம்மிடம் ஒப்படைக்கப்படும் விஷயம் பற்றித் தாம் அரசஅதிகாரிடம் முறையிட்டுள்ளதாகவும் திரு. நல்லநாதன் சொன்னார்.

திரு. நல்லநாதன் மேலும் சொன்னதாவது;

தினமும் 4 அல்லது 5 கடிதங்களே யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இடங்களில் இருந்து வருகின்றன. செவ்வாய், சனிக்கிழமைகளில் வரும் கடிதங்கள் திங்கள், புதன் வெள்ளிக்கிழமைகளில் விநியோகிக்கப்படுகின்றன அக்கடிதங்களை நானே நடந்து சென்று விநியோகித்து வருகின்றேன்.

இதுவரைக்கும் சுமார் 40 வெளிநாட்டுக் கடிதங்களையே விநியோகம் செய்துள்ளேன்.

இப்படி அவர் சொன்னார்.

"நீங்கள் 'தண்டனை இடமாற்றம்' பெற்றா ஊர்காவற்றுறை வந்தீர்கள்?" — என்று செய்தியாளர் ஒருவர் கேட்டபோது "இல்லை" என்று அவர் பதில் அளித்தார் என்று அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-எ]

சனசமூக நிலையங்களின் ஏற்பாட்டில்

## அன்னைபூபதி தினத்தை ஒட்டி பொதுக்கூட்டம், கலை நிகழ்ச்சி

அன்னை பூபதி தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட சனசமூக நிலையங்கள் இன்று புதன்கிழமை மாபெரும் பொதுக்கூட்டத்துக்கும் விடுதலை உணர்வூட்டும் கலை நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்துள்ளன.

இந்த வைபவம் இன்று மாலை 5-00 மணிக்கு நல்லூர் ஆலய வீதியில் ஆரம்பமாகும்.

யாழ் மாவட்ட ச.ச.நி. சமாசங்களின் சம்மேளனத் தலைவர் திரு. இ. தவகோபால் வைபவத்துக்குத் தலைமை வகிப்பார். நாதஸ்வரம், பேச்சு, பாலர் நிகழ்ச்சி, கவியரங்கம், எழுச்சிப் பாடல்கள், நாட்டுக் கூத்து, நாடகம் உட்பட பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அதே சமயம், கோப்பாய் கந்தசாமி கோவிலிலும் இன்று அன்னை பூபதி தினம் தொடர்பாக நினைவஞ்சலி நிகழ்வுகள் நடைபெற உள்ளன. இளையவன் சுடர், வாஞ்சிநாதன், புதுவை அன்னன் ஆகியோர் உரை நிகழ்த்துவர். [இ-30]

# பின்தங்கிய கிராமங்களில் பாலர் கல்வி வசதி இல்லை

### வெள்ளிவிழா மலர் வெளியீட்டில் உரை

கொக்குவில், ஏப் 15

யாழ். மாவட்டத்தில் சுமார் 100 கிராமங்கள் மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ளன. பாலர் கல்வி என்றால் என்னவென்றே தெரியாத நிலையில் இக் கிராம மக்கள் உள்ளனர். பத்துப் பன்னிரண்டு வயதுப் பிள்ளைகள் கூட, பாடசாலை வாயில்களை தரிசிக்காதவர்களாக இருக்கின்றனர்.

யாழ். பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் அண்மையில் நடைபெற்ற பாலர் கல்விக் கழகத்தின் வெள்ளி விழா மலர் வெளியீட்டில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசும் போது உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா இவ்வாறு குறிப்பிட்டார்.

கழகத் தலைவர் திரு. ஆ. செல்லையா தலைமையில் விழா நடைபெற்றது.

திரு. டிவகலாலா மேலும் பேசியதாவது:-

யாழ். மாவட்டத்தில் 400 வரையிலான பாலர் பாடசாலைகள் உள்ளன. இப்பாலர் பாடசாலைகளை நடத்துபவர்களிடையே ஒற்றுமை, ஒழுங்கமைப்பு இன்மையால் ஒரு பொதுவான பாட ஒழுங்குத் - திட்டம் தேவைப்படுவதில்லை.

மொன்ரிசோறி முறையில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களே இத்தகைய பாடசாலைகளில் கடமை புரிவது மிக அவசியம். சமூக சேவையில் நாட்டம் கொண்டு பண உதவி புரியும் புரவலர்கள் ஏனைய செயற்பாடுகளுக்கு பண உதவி புரிவதனை நிறுத்தி ஓரிரு வருடங்களுக்கு கல்வி வளர்ச்சி சேவைகளுக்கு மட்டும் பண உதவி புரிய வேண்டும்.

இவ்வாறு அவர் கேட்டுக் கொண்டார்.

நூல் ஆய்வுரையை கலாநிதி சபாஜெயராஜா நிகழ்த்தினார்.

யாழ். மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு இ. சிவானந்தன், கலாநிதி க. கனகராஜா (மில்க் வைற் அதிபர்) ஆகியோர் ஆசியுரை வழங்கினர். (இ-த-69)

## யெல்ட்சின் அரசு வீழ்ந்தால் அமெ. உதவியை நிறுத்தும்

வாஷிங்டன், ஏப் 15

ரஷ்யா ஜனாதிபதி பொரிஸ் யெல்ட்சின் தலைமையிலான சீர்திருத்த அரசாங்கம் கவிழ்ந்து விட்டால் அந்த நாட்டுக்கான அமெரிக்க உதவி நிறுத்தப்படலாம்.

இப்படி அமெரிக்கா நேற்று எச்சரிக்கை விடுத்தது.

சீர்திருத்தங்களை அமுல் செய்வதாக உறுதியளிக்கப்படாவிட்டால் ரஷ்யாவுக்கான 2 ஆயிரத்து 400 கோடி டொலர் பெறுமதியான அமெரிக்க உதவி வழங்கப்படமாட்டாது என்று அமெரிக்க தேசிய பாதுகாப்புச் சபை ஆலோசகர் நேற்று வாஷிங்டனில் தெரிவித்தார்.

அரசின் புரட்சிகரமான பொருளாதார சீர்திருத்தங்களுக்கு ரஷ்ய நாடாளுமன்றம் எதிர்ப்புத் தெரிவித்ததை அடுத்து ரஷ்ய அமைச்சரவை ராஜினாமாச் செய்துவிட்டது தெரிந்ததே.

## விண்வெளியில் கருந்துவாரம்

வாஷிங்டன், ஏப். 15

விண்வெளியில் பிரமாண்டமான 'கருந்துவாரம்' ஒன்று இருப்பதற்கான சான்றுகளைத் தாம் கண்டுபிடித்திருப்பதாக அமெரிக்காவில் உள்ள விஞ்ஞானிகள் அறிவித்திருக்கின்றனர்.

சூரியனின் வஸ்திரணத்திலும் பார்க்க 30 லட்சம் மடங்கு பெரிதாக அக் 'கருந்துவாரம்' உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

பூமியில் இருந்து 25 லட்சம் ஒளி ஆண்டுகளுக்கு அப்பால் பிரபஞ்சத்தில் இக் கருந்துவாரம் காணப்படுவதாகவும்—

நட்சத்திரங்கள் அல்லது நட்சத்திரத் தொகுதி அழிந்து போனதால் இப்பெரிய துவாரம் ஏற்பட்டிருக்கலாம் என்றும் —

விண்ணில் 'கருந்துவாரம்' ஒன்று இருப்பதற்கான சாட்சியங்களை கடந்த ஒரு தசாப்தமாக வானவியல் விஞ்ஞானிகள் தேடி வந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [இ-எ]

## கடவுச்சீட்டு விண்ணப்படிவங்கள்

கடவுச் சீட்டு விண்ணப்பப் படிவங்கள் கொழும்பிலிருந்து யாழ். செயலகத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

இவற்றில் ஒரு பகுதிப் படிவங்கள் யாழ். மாவட்டப் பிரதேச செயலர் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-100]

# மாமரங்கள் நல்ல விளைச்சல் தருவதற்கு தத்திகளைக் கட்டுப்படுத்துவது அவசியம்

### கூட்டாக மருந்து தெளிக்க தமிழீழ ஆய்வு நிறுவனம் உதவும்

வசந்த காலம் வரப்போகிறது. அதற்கு முன்னர் மரங்களில் இளந்துளிர்கள் நிறைந்து காணப்படும் காலம்.

மாமரங்களும் இன்று இளம் தளிர்களை, மொட்டுக்களை, பூக்களைத் தந்து பொலிவான காட்சியை வழங்கிக் கொண்டிருக்கின்றன. இக் காலத்தில் தான் மாவிலைத் தத்திகளும் இவற்றைத் தாக்க ஆரம்பிக்கின்றன.

மாவிலைத் தத்திகள், மாம் பூக்களின், மொட்டுகளின், இளம் தளிர்களின், சாற்றைக் குத்தி உறிஞ்சிக் குடிக்கின்றன. அதன் பின்னர் அது மலம் கழித்து விடும். இப் பூச்சியின் இனிப்புடை மலம், இலைகளின் மேல் விடப்படும். இக் கழிவுப் பொருளில் பங்கஸ் வளர்ந்து இலைகள் பலவும் கறுப்பு நிறமாகத் தோற்றமளிக்கும். இக் கறுப்பு நிறப்படையினால் மாவிலையில் நடைபெறும் ஒளித்தொகுப்பு தடைப்படுகின்றது. மாவிலைத்தத்தி சாற்றை உறிஞ்சிக் குடிக்கும் இடங்கள் எரிந்தது போல் காணப்படும். இத் தாக்கத்தினால், பூக்கள், இலைகள் விழலாம் அல்லது கருகலாம்.

#### உறங்கு காலம்

மாவிலைத் தத்திகள் தமக்கு சாதகமில்லாத காலத்தை அதாவது இளம் இலைகள், மொட்டுக்கள், பூக்கள் இல்லாத காலத்தில் மாமரக் கிளைகளில், அடிமர வெடிப்புக்களில் ஒளிந்திருந்து தமது உறங்கு காலத்தைக் கழிக்கின்றன. இக் காலத்தில் தத்திகளின் தொகை குறைவாகவே இருக்கும்.

இளம் தளிர்கள், இவ்வருடம் தத்திகளால் தாக்குப்பட நேர்ந்தால் அடுத்த போகம் மா பூக்கும் போது பாதிப்பு பெரிதாகவே இருக்கும். மாமரத் தத்திகளின் தாக்கத்தை தத்திகள் பறந்து போவதையும், மாமரக் கொப்புகளில் பனி விழுதல் போன்ற தோற்றத்தையும், இவை எழுப்பும் ஸ்...... என்ற சத்தத்தைக் கொண்டும் அறிந்து கொள்ளலாம். தத்திகளை இரண்டு முறையில் கட்டுப்படுத்தலாம்.

1. பௌதிக முறை; 2. இரசாயன முறை.

பௌதிக முறையில் புகையடித்தல் முக்கியமானது. பெருமளவில் புகை வரத்தக்கதான பச்சை இலை, குழைகளைப் போட்டு மாலை நேரத்தில் புகைக்கவிட வேண்டும் புகைமரங்களின் பூக்களில் நன்கு படும்படி இருத்தல் வேண்டும். அடிக்கடி புகையடித்தல் வேண்டும்

இரசாயன முறையிலே வசதியான ஒரு பூச்சிக் கொல்லியை விசிறிப் பாவிக்கலாம். நீண்ட "நொசில்" பூட்டப்பட்ட கைத்தெளி கருவியை பாவிக்கலாம். விசை தெளி கருவி இருக்குமானால் இதனாலும் சிறப்பாக விசிறிக் கொள்ளலாம் தனியே ஓரிரு மரங்களுக்கு என்று இரசாயன

…டலில் உள்ள பூத்த மாமரங்களை … விசிறுதல் அவசியம் பூச்சிகள் மீண்டும் காலம் தாழ்த்தி மருந்தடித்த மாம் பூக்களை தாக்கலாம். இதனால் மருந்தடித்தலை அயலவர்களோடு சேர்ந்து ஒரு சமூக முயற்சியாக மேற்கொள்வது நன்மைகளைத் தரும் தேவையைப் பொறுத்து இரசாயன மருந்து விசிறுதலை இடைவெளி விட்டு 2 — 3 முறை செய்யலாம்.

மாவிலைத் தத்திகளுக்கு இரசாயன மருந்தை விசிறும் போது வீட்டுப் பிராணிகளைக் கட்டுப்பாட்டில்வைக்கவும். இளம் கோழிகள் மருந்து பட்ட மாவிலைத் தத்திகளைச் சாப்பிட்டால் ஆபத்து நேரிடலாம் தத்திகளுக்கு சமூக முறையில் இரசாயனம் விசிறப்படும் போது செலவு சுருக்கமாகவும் பூச்சிகள் பெருக போதிய அவகாசம் இல்லாமலும் போகின்றன மாமரங்களுக்கு இரசாயன மருந்து தெளிப்பதானால் தமிழீழ ஆய்வு நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும் இயந்திரத் தெளிகருவி மூலம் இரசாயன மருந்து தெளிப்பதற்கான வசதி செய்யப்படும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் வடக்கு வாழ் மக்களே!



உதயன் உங்களுக்கு அளிக்கும்
உவப்பான
**புத்தாண்டுச் செய்தி!!**

வலிகாமம் வடக்குப் பிரதேசம் வாழ் மக்களின் நலன்களை மனதிற் கொண்டு

**உதயன்** உங்களுக்கு நெருக்கமாக மிக அருகில் வருகிறான்.

உங்கள் போக்குவரத்துக் கஷ்டங்களையும் மற்றும் சிரமங்களையும் தவிர்ப்பதற்காக —

உங்களை அவனே தேடி வருகிறான்!
நாடி வருகின்றான்!!

★ செய்தி
★ விளம்பரம்
★ விநியோகம்
★ அச்சு வேலைகள்

இவை சம்பந்தமான உங்கள் அலுவல்களை வேண்டிய கவனத்துடனும் அக்கறையுடனும் நேரில் கவனிப்பதற்காக

சுன்னாகத்தில்

**உதயன்**
**சேவை நிலையம்**

நாளை சித்திரைப் பூரணை நன்னாளில் (வியாழன், 16-04-1992) காலை 8மணிக்கு வரும் சுப வேளையில் திறந்து வைக்கப்பட உள்ளது.

நேரில் வாருங்கள்!
நாம் உவந்தளிக்கும் சேவையைப் பெறுங்கள்!!

உதயன் சேவை நிலையம்
காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.
(சந்தைக்கு அருகாமையில்)

---

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்கள்
நடத்தும்

## அன்னை பூபதி நினைவு பொதுக்கூட்டமும் கலைநிகழ்ச்சிகளும்

இடம்: நல்லூர் ஆலய வீதி
காலம்: 15-04-1992
இன்று மாலை 5 மணி

★ தேசிய கொடியேற்றம்:
தமிழீழ விடுதலைப் புலிகள் பிரமுகர்

★ சம்மேளனக் கொடியேற்றம்:
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்

அன்னை பூபதியின் உருவப் படத்திற்கு மலர் அஞ்சலி

ஈழத்து நாதஸ்வர தவில் முன்னணிக் கலைஞர்கள் பலர் வழங்கும்
எழுச்சி கானம்

★ பேச்சு:
திரு. பரா — பொறுப்பாளர் தமிழீழ மக்களுறவு கொள்கை முன்னெடுப்புப் பிரிவு
திரு இளம்பரிதி — யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர்
திரு. பொன் பூலோகசிங்கம்
செல்வி ஜனனி — செஞ்சோலை

மற்றும் பாலர் நிகழ்ச்சி, கவியரங்கம்
எழுச்சிப் பாடல்கள்

● சங்கிலியன் நாட்டுக் கூத்து
(சென்மேரிஸ் சனசமூக நிலையம், நாவாந்துறை)

● நாடகம் உணர்ச்சிகள் உறங்குவதில்லை
(திருவள்ளுவர் சனசமூக நிலையம், யாழ்ப்பாணம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சனசமூக நிலையங்களின்
சமாசங்களும் சம்மேளனமும்,
யாழ். மாவட்டம்.

[சி-1911]

---

## யாழ். கடல் ஏரி.....

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

யின்போது அடர்ந்த காட்டில் விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது சில டாங்கிகள் பயன்படுத்தப்பட்டன. அச்சண்டை உக்கிரமானதாக இருந்தது. படையினர் தரப்பில் குறைந்தது 40 படையினர் கொல்லப்பட்டனர்; 75 படையினர் காயமடைந்தனர்.

டாங்கிகளை முன்வைத்து துரிதமாக முன்னேறிச் செல்வதில் கள நிலைமை தொடர்பான சில பிரச்சினைகள் உள்ளன என்றும்—

என்றாலும் யாழ். குடா மீதான இராணுவ நடவடிக்கை பெரும்பாலும் விரைவில் மேற்கொள்ளப்படும் என்றும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

### மே மாதத்தின் பின்னர்

.........குடாநாட்டின் பிரதான பகுதியைப் பிரிக்கும் யாழ்ப்பாண ஏரி வற்றும் வரை இராணுவம் தாக்குதலை தாமதப்படுத்தலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பெரும்பாலும் மே மாதத்தில் யாழ். ஏரி வற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தாக்குதலை ஆரம்பிக்கக் கூடிய இடமாகக் கருதப்படும் யாழ்ப்பாணத்தின் தெற்கு மற்றும் கிழக்குப் பகுதிகள் மணற்பாங்கான திறந்த பிரதேசங்களாக, டாங்கிகளை நகர்த்த உகந்தவையாக இருக்கின்றன. இப்பிரதேசம் சனசஞ்சாரமற்றதாக இருப்பதால் பொது மக்கள் மத்தியில் பெரும் உயிரிழப்புகளை ஏற்படுத்தாமல் படையெடுப்பை நடத்தலாம் என்று இராணுவம் நம்புகிறது.

ஆறு மாதங்களுக்கு முன்பு இருந்ததிலும் பார்க்க விடுதலைப் புலிகள் இப்போது பலவீனமான நிலையில் உள்ளனர் என்று சொல்லப்படுகின்றது. ஆனால் அரசாங்கம் விதிக்கும் நிபந்தனைகளுக்கு ஏற்ப பேச்சுவார்த்தை மேசைக்கு அவர்களைக் கொண்டு வரும் அளவுக்கு அவர்கள் பலவீனமாக இல்லை.

நடாளுமன்றத் தெரிவுக்குழு முன்னால் பிரதிநிதித்துவம் செய்வதற்காக, கொழும்பு வரத் தாம் தயாராக இருப்பதாக விடுதலைப் புலிகள் செஞ்சிலுவைச் சங்கம் மூலம் செய்தி அனுப்பியிருந்தனர்.

### அவருக்கு நம்பிக்கையில்லை

ஆனால், பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணமுடியும் என்பதில் ஜனாதிபதி பிரேமதாஸா சொற்ப நம்பிக்கையே கொண்டுள்ளார் என்று சொல்லப்படுகின்றது.

இராணுவம் சுதந்திரமாகச் செயல்படவும் ஜனாதிபதி பிரேமதாஸா இடமளித்துள்ளார் என்றும் சொல்லப்படுகின்றது.

இறுதித்தாக்குதலுக்கு இன்னும் குறுகிய காலம் தான் உள்ளது என்று கொழும்பில் உள்ள இராணுவ வட்டாரம் கூறுகின்றது.

இறுதித் தாக்குதல் அடுத்த வாரம் நடக்காமல் போகலாம்; ஆனால் அதற்கு மூன்று மாதங்கள் செல்லாது. — என்றும் அந்த இராணுவ வட்டாரங் கூறுகின்றது

விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்த உள்ள ஒரே வழி அவர்கள் மீது யாழ்ப்பாணத்தில் வைத்துக் கடுமையான தாக்குதலை நடத்துவது தான் என்று வடபகுதி இராணுவத்தைச் சேர்ந்த கேர்ணல் ஒருவர் சொன்னார்

''நாம் தயாராக இருக்கின்றோம். எம்மால் செய்ய முடியும் என்று எமக்குத் தெரிகின்றது'' — இப்படி இன்னொரு கேர்ணல் சொன்னார்.

நீண்ட காலமாகக் கூறப்பட்டு வரும், யாழ். குடா மீதான இராணுவத் தாக்குதல் தவிர்க்க முடியாத ஒன்றாக இராணுவத் தரப்பில் காணப்படுகின்றது.

— இப்படி அந்தக் கட்டுரையில் கூறப்பட்டிருக்கிறது.

---

## யானை..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விசுவமடுவைச் சேர்ந்த நீலகண்டன் கிருஷ்ணராசவும், அவரது மனைவி தெய்வானைப்பிள்ளை, மகன் துஷ்யந்தன் ஆகியோருமே காயமுற்றனர்.

இவர்கள் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த வேளை, யானை முறித்த மரக் கிளை வீதியில் திடீரென விழுந்ததால் மோட்டார் சைக்கிள் அதனுடன் மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது.

[அ-15]

---

## சுவிசேஷ ஆராதனைகள்

பாவத்திலும், சாபத்திலும், குடியிலும், பிசாசின் பிடியிலும், வியாதியிலும், உங்களது பிரச்சனைகள், யாவற்றிலுமிருந்து இயேசு உங்கள் யாவரையும் விடுவிக்க வல்லவராக இருக்கிறார்.

உங்களுக்காக ஜெபிக்கப்படும்

இடம் :- இலங்கை பெந்தெகொஸ்தே சபை சாலை 111, கண்டி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

காலம் :- 1992 ஏப்ரல் 16 ஆம் திகதி வியாழன் முதல் 19 ஆம் திகதி ஞாயிறு வரைக்கும்.

நேரம் :- தினமும் மாலை 4.00 மணிக்கு.

யாவரையும் அன்பாய் அழைக்கிறோம்.
இலவச உட்பிரவேசம்

[20480]

---

# BRILLIANT
## கல்வி நிலையம்
சாவகச்சேரி

| A/L 94 | O/L 92 |
|---|---|
| கலை வர்த்தக வகுப்புக்கள் | DAY CLASS |
| ஆரம்பம்:- 19-04-1992 (ஞாயிறு) | ஆரம்பம்:- 21-04 1992 |
| காலை 9 மணி | காலை 9 மணி |

குறிப்பு:- முன்கூட்டியே பெயர்களை பதிவு செய்யவும்.

(2048)

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் [illegible] இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 15-4-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

## உற்சவம்

மூளாய் வதிரன்புலோ ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் கந்தசாமி கோயில் அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரசக்தி விநாயகர் கோயில், திருநெல்வேலி, அரசடி ஸ்ரீ சிவகாமசுந்தரி ஆலயம் ஆகிய ஆகியவற்றில் ரதோற்சவம் இன்று காலை நடைபெறும்.

★ ★ ★

கொழும்புத்துறை கிழக்கு ஆத்தியம்பதி ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் ஆலயம் மற்றும் அருள்மிகு அம்மன் ஐயனார் ஆலயம் ஆகியவற்றில் சித்திரா பூரணை தினமான நாளை சித்திரைக் கதைப் படிப்பு இடம்பெறும்.

---

## ஈழத் தமிழர்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தில் விடுதலைப் புலிகளுக்காக இந்திய மத்திய அரசையே ஜெயலலிதா எச்சரித்தார். அப்போது விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அமைதிப் படைக்கும் இடையில் ஈழத்தில் போர் நடந்துகொண்டிருந்தது.

''விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதல்களை இந்திய அரசாங்கம் உடன் நிறுத்த வேண்டும்; பிரபாகரனை அழைத்து பேச்சு நடத்த வேண்டும். இந்திய அமைதிப் படையினால் தெரிந்தோ, தெரியாமலோ, பிரபாகரனுக்கு தீங்கு இழைக்கப்பட்டால் தமிழ்நாட்டில் விபரீத விளைவுகள் ஏற்படும்.''—இவ்வாறு ஜெயலலிதா அப்போது மத்திய அரசை எச்சரித்தார்.

1989 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின் போது ராஜீவ்காந்தி, அ. தி. மு. கவுடன் தேர்தல் உடன்பாடு காணவிரும்பினார்.

ஆனால் ராஜீவ் காந்தி பிரபாகரனுடன் பேசி இணக்கம் கண்டால்தான் அவரது கட்சியுடன் தேர்தல் உடன்பாடு வைத்துக் கொள்ள முடியும் என்று ஜெயலலிதா நிபந்தனை விதித்தார்.

இந்த நிபந்தனையை ஏற்றுக் கொள்ளாததால் தேர்தல் உடன்பாடு உருவாக முடியாமல் போனது.

பத்மநாபாவும் சகாக்களும் கொலையுண்ட போது ஜெயலலிதா விடுதலைப்புலிகளைத் தாக்கவில்லை; அவர்களைக் கொடியவர்கள் என்று விமர்சிக்கவில்லை. மாறாக 1990 அக்டோபரில் வேறு விதமாகப் பத்திரிகைகளுக்குப் பேட்டியளித்தார்.

''கடந்த இரு மாதங்களாக விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டும் அளவிற்கு தமிழ்நாட்டில் நடந்து கொள்ளவில்லை. அவர்கள் இலங்கையில் அரச இராணுவத்தை எதிர்த்து கடுமையாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இது ஒரு மகத்தான செயலாகும். நாம் ஒன்றை மனதில் கொள்ள வேண்டும். விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டால், ஈழத்தில் தமிழ் இனம் அழிந்து விடும். விடுதலைப் புலிகளின் வெற்றி தான் ஈழத்தமிழரின் வெற்றி''—இப்படி ஜெயலலிதா அப்போது கூறினார்.

இப்படிக் கூறிய ஜெயலலிதா இன்று முதல்வர் பதவிக்கு வந்தபின்னர் விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்டுகிறேன் என்று ஆர்ப்பரிக்கிறார்.

மொத்தத்தில் ஜெயலலிதா ஈழத் தமிழரின் முதுகில் குத்தி விட்டார்.—இவ்வாறு ஆலடி அருணா தெரிவித்தார். [உ]

---

# 94 A/L
## பிரத்தியேக விலங்கியல் வகுப்பு

திரு. ஈஸ்வரதாசன்
B. Sc. (Cey)

ஆரம்பம்:
16-04-1992
(வியாழன்)

[ஆரம்பத்தில் இருந்து மட்டும் அனுமதி வழங்கப்படும்.]

விவரங்களுக்கு:
33, குமாரசாமி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

[சி-1912]

---

## நாளை

''போசாக்கின்மையும் அவற்றைத் தவிர்க்கும் வழிமுறைகளும்'' சம்பந்தமான சுகாதாரக் கருத்தரங்கு ஒன்று நாளை வியாழன் காலை 9-00 மணிக்கு யாழ். மத்திய மருந்தகத்தில் நடைபெறும்.

யாழ். மருத்துவ பீடத்தைச் சேர்ந்த டாக்டர் என். சிவராசா, சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஆர். தெய்வேந்திரம், மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி என். சுந்தரலிங்கம், யாழ். உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. கே. குணரத்தினம் இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிப்பார்கள். [இ-18]

★ ★ ★

சதாவதானி நா. கதிரவேற்பிள்ளையின் 85 ஆவது ஆண்டு நிறைவு விழா. புலோலி மேற்கு சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தில் நாளை நடைபெறும்.

விழாவில் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் சொற்பொழிவுகளும் இடம்பெறும். கம்பன் கழகத்தினர் வழங்கும் ''குற்றவாளிக் கூண்டில் கண்ணகி'' என்ற வழக்காடு மன்றமும் நிகழ்ச்சியில் இடம்பெறவிருக்கிறது. [உ-165]

---

## 10 பேர் மரணம்

கொழும்பு, ஏப். 15

கடந்த ஞாயிறு மாலை தியகம என்ற இடத்துக்கு அருகில் இடம்பெற்ற விபத்து ஒன்றில் ஒன்பது பெண்கள் உட்பட பத்துப் பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

## நடைபெறாது

யாழ்ப்பாணம், ஏப். 15

மாதந்தோறும் பூரணை தினங்களில் நடைபெறும் யாழ். மாவட்ட உலர் வலய அபிவிருத்தி மன்றப் பொதுக் கூட்டம் நாளை பூரணை தினத்தன்று நடைபெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று

யாழ்ப்பாணம், ஏப். 15

யாழ். மாவட்ட வர்த்தக நிலையங்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கும், அவர்களின் குடும்பத்தவர்களுக்கும் இலவச வைத்திய சேவை வழங்கப்படவிருக்கிறது.

இதற்காக இலவச வைத்திய சேவை நிலையம் ஒன்று வர்த்தக ஊழியர் சங்க பணிமனையில் இன்று காலை 10 மணிக்கு திறந்து வைக்கப்படவிருக்கிறது. [உ-3-3]

---

## உடுவில் மகளிர் கல்லூரி

1992 சித்திரையில் புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்கள் இன்று 15—04—92 காலை 8.00 மணிக்கு காரியாலயத்தில் வந்து சந்திக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

[4664] — அதிபர் —

---

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சோதிலிங்கஐயர் சின்னம்மாஅம்மா

1992ஆம் ஆண்டு சித்திரை மாதம் செவ்வாய்க்கிழமை [14-4-92] திருமதி சோதிலிங்கஐயர் சின்னம்மா அம்மா காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சோதிலிங்கஐயரின் அன்பு மனைவியும், சோ. பாலசுந்தரக்குருக்கள், தில்லைநாதன் சரஸ்வதிதேவி, காலஞ்சென்ற தில்லைநாதன் இராசலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக 15-4-92 புதன்கிழமை காலை 8-00 மணிக்கு செம்மணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
சோ. பாலசுந்தரக்குருக்கள்
இல. 62, செம்மணி வீதி,
நல்லூர்.
(20477)

## திரு. யாக்கோப்பு இரத்தினம்

உயரப்புலம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த திரு. யாக்கோப்பு இரத்தினம் 14-4-1992 இல் காலமானார்.

இவர் திருமதி மரியம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தம்பிராசா, காலஞ்சென்ற தம்பிஐயா ஆகியோரின் அருமைச் சகோதரனும், திரு. செல்வரட்ணம் [சிநோர்], அழகுராணி, திரு. தனபால் [கனடா] ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி ஜெயா, திரு. லோறன்ஸ், திருமதி நந்திகா [கனடா] ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெகன், ஜெனா, ஜெடின், ஜெனன், ஆனந், றோகான், நிலானி, நிரோஜினி, தர்மினி [கனடா], தர்ஷினி [கனடா] ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 15 4-1992 பிற்பகல் 3-00 மணியளவில் அன்னாரது இல்லத்திலிருந்து ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் ஆனைக்கோட்டை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. செல்வரட்ணம் [மகன்]
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.
(20481)

## வேலாயுதர் அம்பலவாணர்

வேலணை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட வேலாயுதர் அம்பலவாணர் 14-4-92 இல் சிவபதமடைந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்ற மரகதத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கந்தையா திருமதி அன்னம்மா வல்லிபுரம், ஐயாத்துரை ஆகியோரின் சகோதரரும், லோகேஸ்வரி, மீனலோசனி, பேரின்பநாதன் [சுவிஸ்], உருத்திரபதி [கனடா] தயானந்தன் [கனடா], விபுலானந்தன் [பொறியியல் மாணவன், பேராதனை] ஆகியோரின் அருமைத் தந்தையும், இரகுநாதன் [அக்குராஸ்ஸ], விக்கினேஸ்வரன் [தனியார் போக்குவரத்து சேவை], தேவிகா ஆகியோரின் மாமனாரும், கவிதா, கல்பனா, சுகஸ்தன், காயத்திரி, ஆரணி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 15-4-92 புதன்கிழமை காலை 11 மணிக்கு இல 49, முருகேசர் வீதி, நல்லூரில், நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
க. விக்கினேஸ்வரன்
49, முத்திரச் சந்தை
நல்லூர்.
[8663]